# மெட்ரோ ரயில்கள்: இன்று முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6 மணி முதல் இயக்கப்படும்

சென்னை, நவ. 9: சென்னை மெட்ரோ ரயில்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை இயக் கப்படும் என்று மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு, இந்த வாரத்திலிருந்தே (நவ.10) முதல் நடைமுறைக்கு வரு கிறது.

சென்னை சென்ட்ரல் - பரங்கி மலை, விமான நிலையம் - வண் ணாரப்பேட்டை வரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. மெட்ரோ ரயில்கள் தொடக்கத் தில் வாரத்தில் ஆறு நாள்கள் (ஞாயிறு தவிர) காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இயக்



கப்பட்டது. அதன்பிறகு, ரயில் சேவை நேரம் விரிவாக்கப்பட்டு, வாரத்தில் 6 நாள்கள் (ஞாயிறு தவிர) தினசரி காலை 4.30 மணி முதல் இரவு 11 மணி வரை ரயில் கள் இயக்கப்படுகின்றன.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை இயக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில்கள் ஞாயிற்றுக்கி ழமைகளில் காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு, நவம்பர் 10-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறி யது:- பயணிகள் கோரிக்கையை ஏற்று, ஞாயிற்றுக்கிழமைகளில் நேரம் நீட்டிப்பு செய்யப்பட்டுள் ளது. ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை மெட்ரோ ரயில் இயக் கப்பட்டது. இது நவம்பர் 10-ஆம் தேதி முதல் விரிவுபடுத்தப் படவுள்ளது. அதாவது காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை ரயில்கள் இயக்கப்படவுள்ளன. ஒவ்வொரு 7 நிமிஷங்களுக்கும் ஒரு ரயில் இயக்கப்படும் என்றார் அவர்.

மெட்ரோ ரயில்களில் ஞாயிற் றுக்கிழமை மற்றும் அரசு அறி வித்த பொது விடுமுறை நாள்க ளில் 50 சதவீதம் பயணக் கட்ட ணம் தள்ளுபடி செய்து அறிவிக் கப்பட்டிருந்தது.

அதன்பிறகு, ஞாயிற்றுக்கிழ மைகளில் நேரம் நீட்டிப்பு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பி டத்தக்கது.